(மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசின் பிரிட்ஜ் என்று சொன்னார்)

நான் சொல்வதற்கு முன்னுலே அவரே சொல்லி விட்டார். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் அங்கே ஏற்கனவே இருந்தவர்கள். அந்தப் பகுதி மக்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் தெரியும் என்று சொல்லி விட்டார். அவர் விரும்பினால் பதில் சொல்லலாம்.

திரு. தி. சு. நல்லதம்பி: நான் சொல்லிவிடுகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் தயாராக இல்லை. அவரிடம் விளக்கம் இல்லையாம்.

(ஆ) தருமபுரி மாவட்டம்—கிருஷ்ணகிரி அணை, ஆயக் கூட்டு தாரர்கள் மீது விதிக்கப்பட்ட அதிக வரியை வசூலிக்க எடுத்த நடவடிக்கைகளினால் விவசாயிகள் பாதிப்பு குறித்து.

(முற்பகல் 11-00)

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, "தருமபுரி மாவட்டம்—கிருஷ்ணகிரி அணை ஆயக்கட்டுதாரர்கள் மீது நடைமுறை ஆண்டுக்கு ஏக்கருக்கு ரூ. 120 வரி விதித்து வசூலிக்க விவசாயிகளை கட்டாயப்படுத்துவதால் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மேற்கண்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளத் தொகை பாசன நீட்சி மேல்வரி (Irrigation Extension Surcharge) எனத் தெரிகிறது. ஓர் ஆண்டில் ஆகஸ்டு மாதம் முதல் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 31—ஆம் தேதி முடிய ஆக ஐந்து மாதங்களுக்கு பாசன வசதி அனுமதித்து ஒரு போக பயிர் விளைவிக்கும் நோக்குடன் கிருஷ்ணகிரி அணை கட்டப்பட்டது. விவசாயிகள் குறுகிய காலப் பயிரைத் தவிர நீண்ட காலப் பயிரை விளைவிக்கும் வழக்கத்தை தடுக்கும் பொருட்டு, டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்கு மேல் பாசன வசதி நீடிக்கப்பட்டால் அத்தகைய நீடிப்பிற்கு இயல்பான தண்ணீர் மேல் வரியை விட இரண்டு முதல் 30 மடங்கு வரி பாசன நீட்சி மேல் வரியாக ஒவ்வொரு ஆண்டிலும், வசூலிக்க விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட விதிகளின் கீழ் 1377 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30, 1378 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60, 1379 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120, 1380 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 240, 1381 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300, 1382 பசலி முதல் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 450, என்று

பாசன நீட்சி மேல் வரி விதிக்கப்பட வேண்டும். ஆனுல், 1377 முதல் 1381 பசலி வரை மேற்படி பாசன நீட்சி மேல் வரி விதிப்பை அரசு தள்ளிக் கொடுத்தது. மேலும் 1382, 1383, 1384 பசலிகளுக்குக் கீழக்கண்டவாறு விதிக்கவும் ஆணையிடப் பட்டது :

பசலி ஆண்டு	வரி வீதம்
(1)	(2)
1382	ஒரு ஏக்கருக்கு ரூபாய் 15.00
1383	ஒரு ஏக்கருக்கு ரூபாய் 30.00
1384	ஒரு ஏக்கருக்கு ரூபாய் 60.00

இதன்படி, பாசன நீட்சி மேல்வரி பாக்கியோடு நில்வரி, உள்ளூர் மேல் வரி, தண்ணீர் மேல் வரி மேம்பாட்டு வரி ஆகிய வற்றின் பாக்கித் தொகையையும் வசூலிக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிருர். 1385–ஆம் பசலி ஆண்டிற்கான பாசன நீட்சி மேல்வரி பாக்கியை வசூலிக்க அரசு உத்திரவு பிறப்பிக்காததால் அதனை வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 1386-ஆம் பசலி ஆண்டில் இரண்டாம் போகப் பயிருக்கு கிருஷ்ணகிரி அணையில் பாசனத்திற்கு போது மான தண்ணீர் இல்லாததால் பாசன நீட்சி மேல் வரியை வசூலிக்கவில்லை. 1387 ஆம் பசலி ஆண்டில் அணையில் 16-2-78 முதல் பாசன நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த பசலி ஆண்டிற்கான வரியை வசூலிக்க பிரேரணை இன்னமும் அரசுக்கு வரவில்லை, எனவே தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல நடைமுறை ஆண்டிற்கு ஏக்கருக்கு ரூபாய் 120 வரி விதிக்கப் படவில்லை. வரி பாக்கியை வசூலிப்பதால் விவசாயிகளிடையே எவ்வித பதட்ட நிலையும் இல்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்க உணவு உற்பத்தி ஆணையர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது, பாசனத் திட்டங்களைப் பராமரிக்கவும், விரிவாக்கவும் தேவை யான நிதி பெற வழிவகை செய்வதும்பட, கட்டண விகிதங் களைச் சீரமைப்பது பற்றிய எல்லா பொருள்களையும் கருத்தில் கொண்டு பரிந்துரை அளிக்க இக்குழு கோரப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வரி விதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்ற விளக்கத்தை அமைச்சர் சொன்னதற்கு நன்றி, இந்த நடைமுறை ஆண்டு என்பது கடந்த ஆண்டு என்று இருந்து இருக்க வேண்டும். கொடுத்தது தவறு, திருத்திக் கொள்கிறேன். இந்த ஆண்டிலே விதிக்கப்பட்ட ரூ. 120 இப்போது வசூலிக்கிருர்கள். அதற்காக

பல வகைகளில் ஜப்தி போன்ற நடவடிக்கைகள் கூட எடுக்கப் படுகின்றன. ஆகவே அந்த வரியைப் பலர் கட்டாமல் இருக்கி ருர்கள். பாதிக்கப்பட்டவர்கள் கண்டன ஊர்வலம் போன்ற வற்றை நடத்துவதற்கான வழிகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக் கிருர்கள். இது பொதுவாகவே நித்திய கண்டம் பூர்ணயுசு என்று ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந் தலைவர்கள், விவசாயத் தலைவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்து, அவ்வப்போது அந்த வரி நீக்கப்படுகிறது. ஆகவே, இந்த நிலையை மாற்ற' வரி சீரமைப்புச் செய்ய முயற்சி எடுத் துள்ள அரசு, புதிய வரிவிதிப்புக் கொள்கையை விரைவில் அறிவிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. இதிலே எழுந்த பிரச்னையே 6 ஆண்டு காலத்திற்கு வரிவிதிப்பு தள்ளி வைத்ததால்தான். அதற்குப் பிறகு வரி விதிக்கப்படு கிறது என்று சொல்கிறபோது அதைத் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டு இருக்கிருர்கள். ஆனல், அது குறித்து என்ன வரி விதிக்கலாம் என்று ஆராய குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரை களை விரைவில் பெறுவதற்கு முயற்சிகளை அரசு மேற் கொள்ளும்.

(இ) அம்பலூருக்கு அருகில் உள்ள பாலாற்றிலிருந்து தண்ணீர் வராமையினல், திருப்பத்தூர் டவுனில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் டவுனுக்கு அம்பலூர் அருகில் உள்ள பாலாற்றில் இருந்து குடிநீர் வாரியத்தின் மூலம் வரும் குடிதண்ணீர் சுமார் 15 தினங்களாக வராததால் திருப்பத்தூர் டவுனில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, திருப்பத்தூர் நகரத்திற்கு முன்னேடி குடிநீர் விநியோகம் 35 குதிரைத் திறன் உள்ள நீரேற்றியினல் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு 20 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றியும் மாற்று ஏற்பாடாக உள்ளது. திருப்பத்தூர் நகரின் குறைந்த அளவு நீர்த் தேவை வழங்குவதற்கும் (3.0 லட்சம் காலன்கள்) கேதண்ட பட்டியிலுள்ள திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் (0.4 லட்சம் காலன்கள்) தேவைக்கும் மேற்படி நீரேற்றி 24 மணி நேரமும் வேலை செய்ய வேண்டும்.